Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# பல்லவர்களும் சிற்பகலையும்

17

**முனைவர்.அ.ஸ்ரீதேவி**
**துறைத்தலைவர், தமிழ்த்துறை**
**நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்.105**
a.sridevi4@gmail.com

**ஆய்வுச்சுருக்கம் :**

காலத்தால் அழியாத கலை படைப்பாக சிறந்து விளங்குவது சிற்ப படைப்பை ஆகும். மனிதன் முதன்முதலாக விலங்குகளை வேட்டையாட கல்லை ஆயுதமாக பயன்படுத்தினான். கலைகள் மனித வாழ்வில் தோன்ற இதுவே ஆதாரமாக அமைந்தது. குப்தர்களின் காலத்தில் தான் சிற்பக் கலைகளின் பொற்காலமாக திகழ்ந்தது. பல்லவர் சோழர் பாண்டியர் என அனைத்து மன்னர்களும் சிற்பக்கலைக்கு முக்கியத்துவம் அளித்து செயல்பட்டனர். காஞ்சி, அரிக்கமேடு போன்ற இடங்களில் அகழ்வாராய்ச்சி நடத்தியபோது இதுபோன்ற சிற்பங்கள் ஏராளமாக கிடைத்திருப்பது சான்றாக அமைகின்றது. தொண்டை மண்டலத்தை ஆட்சி செய்தவர்கள் பல்லவர்கள் ஆவார்கள் இவர்களே தமிழகத்தில் குடைவரைக் கோயில்களை உருவாக்கியவர்கள்.

**முன்னுரை:**

நமது பண்பாட்டு கலாச்சாரங்களின் எச்சமாக மட்பாண்டங்களை தவிர்த்த ஏனைய படைப்புகள் யாவும் அழிவுற்ற நிலையில் இன்றும் காலத்தால் அழியாத கலை படைப்பாக சிறந்து விளங்குவது சிற்ப படைப்பை ஆகும். காடுகளில் விலங்குகளோடு விலங்காக வாழ்ந்த மனிதன் தனது அறிவை பயன்படுத்தி இயற்கையோடு ஒருமித்தும் போராடியும் நின்ற காரணத்தாலேயே கலைகள் தோன்றின மனிதன் முதன்முதலாக விலங்குகளை வேட்டையாட கல்லை ஆயுதமாக பயன்படுத்தினான் இதுவே மனித வாழ்வின் முதல் கலையாகும். கலைகள் மனித வாழ்வில் தோன்ற இதுவே ஆதாரமாக அமைந்தது.

**சிற்பக்கலை தோற்றம்:**

இந்தியா முழுவதும் கோயில்களில் சிற்ப கலைக்கு என்று ஒரு தனி இடம் உண்டு அதில் மிகவும் சிறப்பாக தமிழகம் விளங்குகிறது சிற்ப கலையில் தமிழகம் தனக்கு என்று ஒரு சிறப்பிடத்தை பெற்றுப்பது குறிப்பிடத்தக்கது குப்தர்களின் காலத்தில் தான் சிற்பக் கலைகளின் பொற்காலமாக திகழ்ந்தது இதற்கு எடுத்துக்காட்டாக அஜந்தா பூமரா போன்ற இடங்கள் காணப்படுகின்றன. பெரும்பாலான தொல்பொருள் ஆய்வாளர்கள் எண்ணற்ற சான்றாதாரங்களை கோவில் சிற்பக் கலைகளுக்கு உதாரணமாக எடுத்துக்காட்டியுள்ளனர். பல்லவர் சோழர் பாண்டியர் என அனைத்து மன்னர்களும் சிற்பக்கலைக்கு முக்கியத்துவம் அளித்து செயல்பட்டனர். என்பதற்கு எண்ணற்ற சான்றாதாரங்கள் இலக்கியங்களில் காண முடிகிறது. சிற்பத்தை கால அடிப்படையில் முதற்காலம் இடைக்காலம் பிற்காலம் என மூன்று பகுப்பாக பிரித்து ஆராய முடியும். நாயக்கர் கால சிற்பங்கள்

மண்டப தூண்களில் செதுக்கப்பட்டுள்ளன. பாண்டியர் காலச் சிற்பங்கள் அம்பாசமுத்திரம் சின்னமனூர் போன்ற இடங்களில் இன்றும் காணலாம்.

கம்பருக்கு அம்பிகாபதி என்று ஒரு மகன் இருந்தான் அவன் அமராவதியை காதலித்த கதை உலகறிந்தது சோழனுக்கு இந்த செய்தி தெரிந்தவுடன் அம்பிகாபதியின் தலையை வெட்டி விட ஆணையிட்டான் மன்னனிடம் உயிர் பிச்சை வேண்டினார் கம்பர் நூறு பாடல்கள் காதல் கலக்காமல் பாடினால் உயிர்பிச்சை தருவதாக மன்னன் கூறினான் அம்பிகாபதி பாடத் தொடங்கினான் கடவுள் வாழ்த்தை பாடலை சேர்த்து எண்ணிவிட்டதால் 99 பாடல்கள் பாடியவுடன் 100 பாடல்கள் பாடிவிட்டதாக கருதி நூறாவது பாடலாக அமராவதியை வர்ணித்து காதல் சுவைத்தது ரொம்ப பாடிவிட்டான் கலை என்பது நம்முள் கலந்தது அதை நம்மிடம் இருந்து பிரிக்க இயலாதது என்பதற்கு இதுவே சான்றாகும்.

**“சற்றே சரிந்த குழலே அசைய ஒருத்தி வருகிறாள்**
**முத்து வடம் அசையும் மார்போடு அவள்**
**பொன்னாளாகிய தேர் போல் அசைந்து வருகிறாள்”.1**

(அம்பிகாபதி அமராவதி நாடகம்- **ப எண் 100)**

என்ற பாடலை பாடினான்.

**சிற்பத்துக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்கள்:**

தமிழர்கள் சிற்பங்களை உருவாக்க மரம், தந்தம் போன்ற பொருட்களை பயன்படுத்தினர் சுவர்களிலும் மணலிலும், கல்லிலும், அழகான சிற்பங்களை செதுக்கினர். பல்லவர் காலத்திற்கு முன்பு சுதைகளிலும் மண்ணிலும் சிற்பங்கள் செய்யப்பட்டன அதோடு மட்டுமில்லாமல் மெழுகு, அரக்கு, பஞ்சலோகம் போன்ற பொருட்களைக் கொண்டும் சிற்பங்கள் உருவாக்கப்பட்டன காஞ்சி, அரிக்கமேடு போன்ற இடங்களில் அகழ்வாராய்ச்சி நடத்தியபோது இதுபோன்ற சிற்பங்கள் ஏராளமாக கிடைத்திருப்பது சான்றாக அமைகின்றது. பெரும்பாலும் சிற்பங்கள் தெய்வ வடிவங்களை தாங்கியதாகவே இருக்கும் கோபுரங்களில் தெய்வ வடிவங்களை தவிர்த்து விலங்குகள், பறவைகள், பூக்கள், செடிகள், கொடிகள் ஆகியவற்றையும் சிற்பிகள் அழகாக படைத்திருப்பதை இன்றும் நாம் காண முடிகிறது. ஆடை அணிகலன்கள் தெய்வ வடிவங்கள் உடலோடு ஒட்டியவையாக அமைக்கப்படுகின்றன.

**“கல்லும் உலோகமும் செங்கல்லும் மரமும்**
**மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்**
**கண்ட சர்க்கரை மெழுகும் என்று இவை**
**பத்து சிற்பத் தொழில் குறுப்பாவன”2**

( நிகண்டு - **ப எண் 372)**

**சிற்பத்திற்கு திருமந்திரம் கூறும் அழகிய மேற்கோள்:**

மரத்தால் ஒரு யானை செய்தான் சிற்பி யானை போன்ற அச்சு அசல் ஆகவே இருந்தது அது யானை என்று கருதி பார்த்தவர்களுக்கு மரம் என்று நினைக்கத் தோன்றவில்லை அது மரம் என்று கருதியவர்களுக்கு யானை என்று நினைக்கத் தோன்றவில்லை இதைத்தான்,


"மரத்தை மறைத்தது மமதயானை
மரத்தில் மறைந்தது மமத யானை"3
(திருமூலர் - மந்திரம் ப எண் 2290)

**பல்லவர் கால சிற்பங்கள்:**

காஞ்சிபுரத்தை தலைமையாகக் கொண்டு கி.பி ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை தொண்டை மண்டலத்தை ஆட்சி செய்தவர்கள் பல்லவர்கள் ஆவார்கள் இவர்களே தமிழகத்தில் குடைவரைக் கோயில்களை உருவாக்கியவர்கள் இவர்கள் உருவாக்கிய சிற்பங்கள் மூவகை அமைப்பினை கொண்டது

**குடைவரைக் கோயில்**

பல்லவ மன்னர்களின் சிந்தனைத் திறனின் வெளிப்பாடு குடைவரைக் கோயில்கள் எனலாம் மரம் செங்கல் மண் சுதை சுண்ணாம்பு போன்றவற்றால் கட்டப்படும் கட்டிடங்கள் காலத்தால் அழிந்து போவதை கருதி காலத்தால் அழியாத கோவில்களை உருவாக்கும் நோக்கத்துடனே முதன் முதலில் மலைப்பாறைகளை குடைந்து கொடைவரைக் கோயில்களை கட்டினான் மகேந்திர வர்ம பல்லவன். பல்லவர்கள் காலத்தில் மிக அதிகமாக எழுந்த கோவில்கள் இத்தகைமையதே. குன்னக்குடி பகுதியில் அமைந்திருக்கின்ற பிள்ளையார்பட்டி அரட்டாபட்டி திருமலை போன்ற இடங்களும் மதுரைக்கு அருகாமையில் உள்ள மாங்குடி ஆனைமலை போன்ற பகுதியும் திருப்பரங்குன்றம் மலையடி குறிச்சி வீரசிகாமணி ஆனையூர் திருமலைபுரம் திருச்செந்தூர் போன்றவை குடைவரை கோயில்கள் வகைக்கு உட்படுத்தப்பட்டு இன்றும் பலரால் வியக்கத்தகு ஒன்றாகவே நிலை கொண்டு உள்ளன.



**குடைவரைக் கோயில் (மண்டகப்பட்டு)**

**வராக மண்டபம்-வராகச் சிற்பம்:**

நீரைக் குறிக்கும் இடங்களில் எல்லாம் நாகத்தையோ, (தாமரை) மலரையோ காட்டுதல் சிற்பம் வடித்தலில் உள்ள மரபு. அரக்கனின் மனைவியும் அரக்கனைப்போலவே கை தொழுது இறைஞ்சுகிறாள். அவள் அருகில் இராஜ குரு. வராக இறைவனின் கைகளில் ஒன்றில் சங்கும் மற்றதில் ஏவுநிலைச் சக்கரமும் (பிரயோகச் சக்கரம்). இந்த ஏவுநிலச் சக்கரம் பல்லவச் சிற்பங்களின் சிறப்புக் கூறுகளுள் ஒன்று. வராகருக்கு அருகில் திருமகளை அடுத்துச் சூரியன். வராகருக்கு இடப்புறம்

பிரம்மா; அவரருகில் நாரதர். வராக முகத்தின் தலைக்கு நேராகத் தலைக்கிரீடத்தைக் காட்டாமல், வராகத்தின் மூக்குச் சாய்மானத்துக்கேற்பச் சமன் செய்யும் (BALANCING) நிலையில் சாய்ந்தநிலையில் காட்டியுள்ள சிற்பத்திறன் குறிப்பிடத்தக்கது.



**(வராகச் சிற்பம்)**

**முடிவுரை :**

இந்தியா முழுவதும் சிற்பக்கலை சிறப்பு பெற்றிருந்த போதிலும் குறிப்பாக தமிழகத்தில் பல்லவர் ஆட்சி காலத்தில் சிற்பக்கலை வளர்ச்சி மிக சிறப்பாக இருந்தது என்பதற்கு எண்ணற்ற சான்றாதாரங்கள் கிடைத்துள்ளன. சிற்பக்கலை வளர்ச்சியில் பல்லவர்கள் செயல் மைல்கல்லாகும். குடைவரை கோவில், ஒற்றை கோவில் போன்ற பெருமையின் பிறப்பிடமாக திகழ்கிறது. தமிழகம் இருக்கும் வரை, சிற்பக்கலை இருக்கும்; சிற்பக்கலை இருக்கும் வரை, பல்லவர்கள் புகழ் இருக்கும் என்பதை இக்கட்டுரை உறுதிப்படுத்துகிறது.

**குறிப்பு சொற்கள் :**

மந்திரம் -திருமந்திரம்

நிகண்டு-திவாகர நிகண்டு

பா எண் -பாடல் எண்

**துணை நூற்பட்டியல்:**

1. திவாகர நிகண்டு- பதிப்பாசிரியர் மு. சண்முகம் பிள்ளை இ. சுந்தரமூர்த்தி இயக்குநர் பதிப்புத்துறை சென்னைப் பல்கலைக்கழகம், முதல் பதிப்பு 1990.

2. திருமந்திரம்- திருமூலர், கவிதா பதிப்பகம், சென்னை.

3. பவணந்தி முனிவர் நன்னூல் - உலக தமிழாராய்ச்சி நிறுவனம் ,1999